# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 183-2022**

**Prosecution witness : அ.சா.4** **Date : 07.08.2023**

| | |
|---|---|
| **Name : மாலதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 4 present. ) (Accused 1,2,3, 5, absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது உதவி பொறியாளராக தருமபுரி டவுன் பகுதியில் வேலை செய்து வருகிறேன். அ.சா1 ,2,3 ஆகியோரை தெரியும். அ.சா1 எங்களால் பணியமார்த்தபட்ட தினகூலி அடிப்படையில் அமர்த்தபட்ட நபர் ஆவரா். நேதாஜி மற்றும் குமார் ஆகிய இருவரும் அரசு ஊழியர்கள் ஆவார்கள். கடந்த 2022-ம் வருடத்தில் தொப்பையாறு பொது பணித்துறையில் கால்வாயில் பாசனத்திற்காக கடைமடை பகுதிக்கு தண்ணீர் கொண்டு செல்லும் மற்றம் மதகு அடைக்கும் வேலை செய்யும் வேலைக்கு கூலி அடிப்டையில் கோவிந்தராஜ் என்பவரை பணி அமர்த்தினோம். கடந்த 14.02.2022-ம் தேதி மாலை 5 மணிக்கு எனக்கு போன் முலமாக கால்வாயில் தண்ணீர் அ.சா1 மணல் முட்டைகளை வைத்து மதகு அடைத்துக்கொண்டு வரும்போது, திப்பிரத்தாம்பட்டியில் உள்ள நடராஜ் என்பவர் காட்டின் அருகில் மதகு அடைக்கும்போது, நடராஜ் மற்றும் குடும்பத்தார் அடிப்பதாக என்னிடம் சொன்னார்.

2) நான் அடிபட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல அறிவுறத்தினோன். சம்பவ சமயத்தில் அவா1,2,3 ஆகியோர் இருந்தார்கள். அ.சா1 எதிரிகளில் நடராஜ் மற்றும் குடும்பத்தார் அடிப்பதாக சொன்னார்கள். பிறகு காயம்பட்ட அ.சா 1 நேதாஜி மற்றும் குமார் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு

அழைத்து சென்று சிகிச்சை பெறுவதாக சொன்னார்கள். நான் 15.02.2022ம் தேதியன்று நான் மற்றும் குமார் சென்று அசா1 யை பார்த்தேன். நான் தான் காவல் நிலையம் புகார் கொடுக்க சென்றேன். புகார் பாதிக்கபட்டவர் கொடுக்கட்டும் என்னிடம் சான்றிதழ் அசா1,2,3 ஆகியோர் பொது பணி துறையில் வேலை செய்தது குறித்து கேட்டு பெற்றார்கள். சம்பவ இடத்தை நான் நேரில் சென்று பார்த்தேன். என்னிடம் காட்டபடும் சான்றிதழ் நான் காவல் நிலையத்தில் கொடுத்தது என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அ.தா.ச ஆ 2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

3). போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் விசாரித்தார்கள் , அதனை எழுத்துபூர்வமாக எழுதி கொண்டார்கள். நான் சொன்ன முழுவிபரமும் அதில் எழுத பட்டதா என்பது எனக்கு தெரியாது. நேதாஜி என்பவர் எனது அலுவலகத்தில் வேலை செய்யும் நிரந்திர பணியாளர் இல்லை என்றால் சரிதான். ஒப்பந்த ஊழியர் ஆவார். மணல் முட்டை அடைத்த விபரத்தை நான் முதன் முதலாக சொல்கிறேன் என்றால் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்.

4). நான் போலிசார் விசாரணையில் சொல்லியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுப்பதற்காக மேச்சேரி சென்ற போது பாதிக்கபட்டவர் புகார் கொடுக்கட்டும் என்ற விபரத்தை காவல்துறையினார் என்னிடம் சொன்ன விபரத்தை நான் முதன் முதலாக சொல்கிறேன் என்றால் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் போலிசார் விசாரணையில் சொல்லியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சான்றிதழில் நேதாஜி குமார் என்ற இருவரும் அசா1 யுடன் சேர்ந்து பணி செய்ய வாசகம் இல்லை என்றால் சரிதான். அ,சா2 மற்றும் 3 இருவருக்கும் தான் மதகு உள்ள இடம் தெரியும்.அதனால் மதகு திறந்திருந்தால் அதனை அடைக்க அசா1 யுடன் செல்ல அறிவுறுத்தபட்டேன். இந்த விபரம் சான்றிதழில் இல்லை என்றால் சரிதான்.

5). சான்றிதழில் மதகு களை அடைத்து தண்ணிரை எடுத்து செல்ல சொல்லும் வாசகம் இல்லை என்றால் சரிதான். 19.01.2022ம் தேதியன்று பாசனத்திற்காக

எவ்வளவு நாட்கள் தண்ணீர் திறந்துவிடப்டும் என்றால் 90 நாட்கள் திறக்கபடும். 90 நாட்களும் கடைமடைக்கு இறுதி வரை தண்ணிர் செல்லும் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் அவ்வாறு தண்ணீர் அனைத்து நாட்களுக்கும் கொண்டு செல்ல முடியாது. என்ன பயிர் தேவைக்காக தண்ணீர் திறக்கபடும் என்றால் நெல் அல்லாத பிற பயிர்களுக்கு திறக்கபடும்.

6). கடைமடை வரை செல்லும் வகையில் அளவு தெரிந்து கொண்டு அதன் வகையில் தண்ணீர் திறக்கபடும் என்றால் சரிதான். 19.01.2022 ம் தேதியன்றும் அதே முறையில் தண்ணீர் திறக்கபட்டது என்றால் சரிதான். வாய்கால் கடைமடைக்கு எப்போது சென்றது என்றால் 22.02.2022 ம் தேதிக்கு சென்றது. காலதாமத்திற்கு காரணம் சரியாக பாரமரிக்கபடாமல் உள்ளதால் என்றால் இல்லை.

7). வாய்காலின் நீளம் 24.2 கி.மீ ஆகும். ஒரு நாளைக்கு ஒரு கி.மீ கூட தண்ணீர் கடக்காது என்றால் விவரிவாக சொல்லமுடியாது. ஒரு நாளைக்கு ஒரு கி.மீ கூட தண்ணீர் கடக்காது என்றால் கடந்து சென்றது. 24 நாளில் தண்ணீர் கடந்து சென்றிருக்கும் என்றால் தண்ணீர் போகாது. வாய்காலில் எத்தணை மதகு உள்ளது என்றால் 46 மதகு உள்ளது. அதில் 23 மதகுகளில் கதவு உள்ளது. மீதியுள்ள 23 மதகு கதவு இல்லை என்றால் சரிதான்.

8). 23 மதகு கதவு இல்லை என்பது எவ்வளவு நாளில் தெரிய வரும் என்றால் நான் அந்த பகுதியில் பணியில் சேர்ந்த நாள் முதல் தெரியும். நான் எப்போது பணியில் அமர்த்தபட்டேன் வருடம் 2015 ஆகும். தேதி நினையில்லை. 2015 ல் இருந்து கதவு மதகுகளில் இல்லை என்பதால் அதனை கதவு போட நடவடிக்கை எடுக்கவில்லை. முயற்சி செய்தோம், ஆனால் கதவு களை எடுத்து சென்று விடுகிறார்கள். எத்தனை முறை கதவு காணாமல் போனது என்றால் நான் வந்தவுடன் 2022 ல் தான் தண்ணீர் திறக்கபட்டது. அதனால் 2022 ல் தான் முதன் முதலாக தண்ணீர் திறக்கபட்டதால் கதவு போட்டால் காணாமல் போய் விடும் என்பதால் கதவு போடவில்லை என்றால் சரிதான்.

9). கதவு போட்டிருந்தால் மதகு களை அடைக்கவேண்டிய அவசியமில்லை என்றால் சரியாக தண்ணிர் கடைமடை வரை சென்றிருக்கும் என்றால் இந்த

ஒரு காரணத்திற்காக மட்டுமே கதவு வைக்கவேண்டியதில்லை. அதுவும் ஒரு காரணம் என்றால் சரிதான். மற்ற காரணத்தை என்ன சொல்லமுடியும்.

10). நடராஜ் தோட்டம் என்பது கடைமடை பகுதி என்றால் சரிதான். நடராஜ் தோட்டம் அடுத்து 2 மதகு உள்ளது என்றால் சரிதான். நடராஜ் தோட்டத்திலிருந்து 1 கிமீ வாய்கால் முடிவடைகிறது என்றால் சரிதான். நடராஜ் பூமிக்கு அருகில் உள்ள பாசன பூமிகள் எவ்வளவு உள்ளது என்ற விபரம் ஆவணவடிவில் உள்ளதா என்றால் உள்ளது. நடராஜ் பூமிக்கு அடுத்து ள்ள 2 மதகுகளில் கதவு உள்ளது என்றால் இல்லை.

11). எனக்கு முன்பாக கதவுகள் காணாமல் போனது குறித்து புகார் கொடுத்தது குறித்து எங்களது அலுவலக கோப்பில் உள்ளதா என்றால் நான் பார்க்கவில்லை. மதகுகளில் கதவு கள் காணாமல் போனது குறித்த புகார் கொடுத்தது குறித்து எங்களது அலுவலக கோப்பில் உள்ளதா என்றால் நான் பார்க்கவில்லை. நான் வாய்காலை முறையாக துர்வாரி முறையாக பாரமரித்தால் மதகுகளை பார்த்து கொள்ள ஆட்களை பணியமார்த்தபட வேண்டிய அவசியமில்லை என்றால் அது முடியாத காரியமாகும். என்ன காரணம் என்றால் 24 கிமீ துாரத்தை 2 பேர் வைத்து பார்த்துகொள்ளமுடியாது, மதகுகளை சரியாக பொருத்தியிருந்தால் மதகு களை திறந்து தண்ணீர் பாசனத்திற்காக எடுக்கிறார்கள். அப்படி எடுத்தால் தண்ணீர் திருட்டு யாகும். இது சம்பந்தமாக எத்தனை கண்டுபிடித்து காவல்துறையில் புகார் கொடுத்திருக்கிறிர்களா என்றால் இல்லை.

12). தண்ணீர் திருட்டு பற்றி தெரிந்துதிருந்தும் திருட்டு நடவடிக்கைகளை உடந்தையாக இருந்தேனா என்றால் அவ்வாறு இல்லை. பாசனத்திற்காக விடபட்ட தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்தி கொண்டிருக்கும் போது தண்ணீரை முறைபடுத்த மதகுகளில் கதவு பொருத்துவரை தவிர்த்து மணல் முட்டை கொண்டு தண்ணீரை அடைப்பது அதிகார மீறல் என்றால் சரியல்ல.

13). நடராஜ் பூமி அருகில் உள்ள மதகின் தண்ணீர் பாசனத்திற்காக தண்ணீர் சென்று கொண்டிருந்ததை தான் அடைத்தார் என்றால் சரிதான். அப்படி அடைத்தால் தான் பிரச்சனை என்றால் சரிதான். விவசாய அமைப்புகள் தலைவர் கொண்ட அமைப்பு இருந்ததது என்றால் தற்போது அமைப்புகள் இல்லை.

எப்போதிலிருந்த இல்லை என்றால் எப்போதும் இல்லை. வாயக்காலில் முறைபோட்டு பாசனத்திற்காக தண்ணீர் கொடுக்கபட வில்லை என்றால் முறைகோட்டு தான் கொடுத்தோம். முறைபோட்டு தண்ணீர் திறக்கபடவில்லை என்று பணியாளர்கள் சொல்லியிருந்தால் அவர்கள் சரியாக புரிதல் இல்லை என்றால் சரிதான். சம்பவம் குறித்து மேல் அதிகாரிக்கு தகவல் கொடுத்தேன் என்றால் கொடுத்தேன்.

14). சம்பவத்திற்கு காரணம் எனது பணியாளர்கள் ஒவ்வொரு மதகுகளில் சென்று பாசனத்திற்காக சென்ற தண்ணீரை மணல் முட்டை வைத்து அடைத்தது தான் காரணம் என்றால் சரியல்ல. நேதாஜி மற்றும் குமார் மதகுகளை முறைப்டுத்தும் பணிக்கு அமர்த்தபடவி ல்லை என்றால் சரியல்ல. அதனை கேட்ட எதிரிகளை எனது அலுவலர்கள் அடித்து விட்டார்கள் என்றும், அதனை மறைத்து அசா1 மற்றும் 2,3, நியாயம் கேட்டவர்களை அடித்து விட்டு ஓடும் போது ஏற்பட்ட காயத்தை எதிரிகள் செய்ததாக சொல்லி பொய் புகார் கொடுக்கபட்டது என்றால் சரியல்ல.

15). மதகுகளில் கதவு பொருத்தபடாமல் உள்ள காரணத்தை வெளியே சொன்னால் எனக்கு தொந்திரவு ஏற்படும் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சான்றிதழ்கொடுத்தது தவறுகளை மறைப்பதற்காக கொடுக்கபட்டது என்றால் சரியல்ல. இதன் காரணமாக மட்டுமே அசா1 க்கு மட்டுமே சான்றிதழ் கொடுக்கபட்டது என்றால் சரியல்ல. காவல் துறைக்கு செல்லும் போது மணி எத்தனை இருக்கும் பகல் 11 மணி இருக்கும் என்றால் சரிதான். 15.02.2022ம் தேதி மணி வரை புகார் ஏதுவும் பெறபடவில்லை என்றால் சரிதான்.

16). சான்றிதழில் வெவ்வெறு மையினால் அதாவது கையொப்பம் ஒரு மையினாலும் , எழுத்துக்கள் ஒரு மையினாலும் உள்ளது என்றால் சரிதான். 17.02.2022ம் தேதி கையொப்பமிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**